## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கு இடையிலான விஞ்ஞானம் சார்ந்த போட்டி நிகழச்சி - 2022/2023

ஆண்டுதோறும் வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கு இடையில் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பல்வேறு விஞ்ஞானம் சார்ந்த போட்டி நிகழச்சிகளை நடாத்தி வருகின்றது. அதன் தொடர்ச்சியாக இவ்வருடமும் பின்வரும் எட்டு வேறுபட்ட எண்ணக்கருக்களுடன் போட்டிகளை நடாத்த உத்தேசித்துள்ளது.

1. கண்காட்சிப் போட்டி (Exhibit competition)
2. சுவரொட்டி போட்டி (Poster competition)
3. விபரணப்படப் போட்டி (Documentary film competition)
4. பாடசாலைத் தோட்டப் போட்டி(School gardening competition)
5. வினாவிடைப் போட்டி (Quiz competition)
6. புனைகதைப் போட்டி (Fiction story competition)
7. பேச்சுப் போட்டி (Oration competition)
8. கைப்பேசி புகைப்படப் போட்டி (Mobile photography competition)

இப்போட்டிகளுக்காக பாடசாலை மாணவர்கள் கீழ்வரும் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பிரிவு I – தரம் 6-8

பிரிவு II – தரம் 9-11

பிரிவு III – தரம் 12-13

ஒவ்வொரு போட்டிகளினதும் இறுதியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் இறுதி நாள் நிகழ்வில் வழங்கப்படுவதுடன் பங்குபற்றும் மாணவர்கள் அனைவருக்கும் e-certificate வழங்கப்படும்.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் அனைவரும் தமது விபரங்களை கீழே தரப்பட்டுள்ள இணைப்பில் (google form) பூரணப்படுத்தி அனுப்புதல் வேண்டும். ஒரு பாடசாலையிலிருந்து அப்பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் அனைத்துப் போட்டிகளையும் பாடசாலைக்கு ஒரு விண்ணப்பப்படிவம் அதாவது ஒரு இணைப்பினை மாத்திரமே பயன்படுத்தி சரியான வகையில் பூரணப்படுத்தி அனுப்புதல் வேண்டும். போட்டிகள் இடம்பெறும் திகதிகள் அந்தந்த போட்டிகளிற்கு விண்ணப்பிக்கும் பாடசாலைகளுக்கு பின்னர் அறியத்தரப்படும்.

JSA SCHOOL SCIENCE COMPETITION - Google Forms

## 1. கண்காட்சிப் போட்டி (Exhibit competition)

ஒரு பாடசாலையிலிருந்து மூன்று பிரிவுகளிலுமிருந்து மாணவர்கள் கண்காட்சிப்போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர். ஒரு பாடசாலையிலிருந்து ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை காட்சிப் பொருட்களையும் காட்சிப்படுத்தலாம். ஒரு காட்சிப்படுத்தலை தனியாக அல்லது ஆகக்கூடியது மூன்று மாணவர்கள் கொண்ட குழுவாக மேற்கொள்ள முடியும். காட்சிப்படுத்தலுக்கான ஒழுங்குகள் மாணவர்களினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். இக்காட்சிப்பொருட்கள் தொடர்பான எவ்வித செலவுகளையும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பெறுப்பேற்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காட்சிப்படுத்தலுக்கான ஆக்கங்கள் விஞ்ஞானம் சார்ந்த புத்தாக்கமாகவும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளை தீர்க்கும் திறனையும் "அடிப்படை ஆராய்ச்சியின் மூலம் அறிவுசார்ந்த பொருளாதாரத்தில் சிறந்து விளங்குதல் (Excel in the knowledge based economy through the fundamental research)" என்ற விஞ்ஞானசங்கத்தின் இவ்வாண்டிற்கான துணைக் கருப்பொருளுக்கு வலுச்சேர்ப்பதாகவும் அமைய வேண்டும். சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள், சக்தி வள மேம்பாடு மற்றும் கழிவுப்பொருள் மீள்சுழற்சி, மீளுருவாக்கம் என்பன கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இயலுமானவரை குறைந்த செலவில் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். இலகுவில் இடம்மாற்றக்கூடியதாக (எடுத்துச் செல்லக் கூடியதாக) இருத்தல் வேண்டும்.

இப்போட்டியானது மாகாண மட்டத்தில் நடைபெறும். இப்போட்டி அவ்வலயத்தில் அமைந்துள்ள தெரிவு செய்யப்பட்ட ஒரு பாடசாலையில் மட்டுமே இடம்பெறும். அங்கு அவ்வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் போட்டி நடைபெறும் பாடசாலைக்கு சமூகமளித்து காட்சிப்பொருளை காட்சிப்படுத்துவர். இதற்குரிய விளக்கங்களை மாணவர்கள் விஞ்ஞான ரீதியில் மதிப்பீட்டாளருக்கு அறியத் தருதல் வேண்டும்.

மதிப்பீட்டின் போது பின்வருவன கருத்தில் கொள்ளப்படும்: புத்தாக்கம் (Innovation), தன்முனைப்பு (Self-motivation), பயனர்நட்பு (User friendly), தொழில்நுட்ப எளிமை (Technical simplicity), தேசிய அல்லது பிராந்திய முக்கியத்துவம் (National or regional importance), மற்றும் நிலைத்தன்மை (Sustainability).

## 2. சுவரொட்டி போட்டி (Poster competition)

ஒரு பாடசாலையிலிருந்து ஒவ்வொரு பிரிவிலும், தனித்தனியாக ஆகக்கூடியது மூன்று (03) மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர். சுவரொட்டிப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் போட்டி நடைபெறும் இடத்திலேயே தாம் கொண்டுவரும் Bristol board ல் தாம் கொண்டுவந்த பொருட்களைக் கொண்டு வரைய/ஆக்க வேண்டும். சுவரொட்டிக்கான ஒழுங்குகள் மாணவர்களினாலேயே செய்யப்பட வேண்டும். இக்காட்சிப்பொருட்கள் தொடர்பான எவ்வித செலவுகளையும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பெறுப்பேற்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுவரொட்டியானது விஞ்ஞானம் சார்ந்த புத்தாக்கமாகவும் மற்றும் விஞ்ஞானசங்கத்தின் இவ்வாண்டிற்கான துணைக் கருப்பொருளான "அடிப்படை ஆராய்ச்சியின் மூலம் அறிவுசார்ந்த பொருளாதாரத்தில் சிறந்து விளங்குதல் ("Excel in the knowledge based economy through the

fundamental research)" என்பதற்கு வலுச்சேர்ப்பதாகவும் அமையவேண்டும். இவ் எண்ணக்கருவினை மாணவர்கள் வர்ணங்கள், ஒட்டுத்துண்டுகள் முதலானவற்றினைப் பயன்படுத்தி Bristol board இல் வெளிப்படுத்தலாம்

இப்போட்டியானது மாகாண மட்டத்தில் நடைபெறும். இப்போட்டி அவ்வலயத்தில் அமைந்துள்ள தெரிவு செய்யப்பட்ட ஒரு பாடசாலையில் மட்டுமே இடம்பெறும். அங்கு அவ்வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் போட்டி நடைபெறும் பாடசாலைக்கு சமுகமளித்து குறிக்கப்பட்ட நேரத்தினுள் சுவரொட்டியினை தயாரித்து காட்சிப்படுத்துவர். மாகாண மட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த முதல் மூன்று சுவரொட்டிகள் தெரிவுசெய்யப்பட்டு அவை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் வருடாந்த நிகழ்வில் காட்சிப்படுத்தப்படும்.

## 3. விபரணப்படப் போட்டி (Documentary film competition)

மேற்படி போட்டியில் மாணவர்கள் மேற்குறித்த மூன்று பிரிவுகளிலும் தனியாகவோ அல்லது ஆகக்கூடியது மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவாகவோ பங்கு பெறலாம். பங்கு கொள்பவர்கள் ஏற்கனவே இருக்கும்/நடக்கும் ஒரு விடயத்துடன் தொடர்புபட்ட விஞ்ஞானப் பொறிமுறையை ஒரு விளக்கக் காணொளியாக கைத்தொலைபேசி மூலம் காட்சிப்படுத்தி அனுப்பவேண்டும். உதாரணமாக, ஒரு குளிரூட்டி எவ்வாறு இயங்குகிறது என்பதனை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து அதன் இயங்குமுறையை ஒரு விபரணப் படமாக்கலாம் (இது ஒரு உதாரணத்திற்காகவே தரப்படுகிறது). இதுபோன்று நீங்கள் அன்றாட வாழ்வில் காணும் ஒரு விடயத்தைப் பற்றி அல்லது இயற்கையில் நிகழும் ஒரு விடயத்தைப் பற்றி ஒரு விபரணப் படத்தைத் தயாரிக்கலாம்.

விதிமுறைகள்: காணொளி ஆகக்கூடியது பத்து நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். காணொளி கைத்தொலைபேசிகளை மட்டுமே பயன்படுத்தி உருவாக்கப்பட வேண்டும். விபரணப்படம் இந்தப் போட்டிக்காகவே தயாரிக்கப்பட்டிருக்கவேண்டும். இந்த விபரணப்படத்துக்காக மாணவர்கள் எந்தவொரு பொருட்செலவும் செய்தலாகாது. அத்தோடு, ஏனையோரின் உதவிகளையும் பெறலாகாது. அவ்வாறு அடையாளங்கண்டால் குறித்த காணொளிகள் போட்டிக்குச் சேர்க்கப்படமாட்டாது.

நீங்கள் மேற்கூறப்பட்ட இணைப்பினூடாக விண்ணப்பித்த பின்னர் நாம் உங்களுக்கு அனுப்பிவைக்கும் இணைப்பினூடாக காணொளியை நீங்கள் சமர்ப்பிக்கவேண்டும். அத்தோடு, நீங்கள்தான் குறித்த காணொளியை உருவாக்கினீர்கள் என்ற விடயத்தை உறுதிப்படுத்தி உங்கள் பாடசாலை அதிபரின் அத்தாட்சிக் கையொப்பத்துடன் ஒரு கடிதத்தின் பிரதியையும் தரப்படும் இணைப்பினுடாகச் சமர்ப்பிக்கவேண்டும். போட்டியில் வெல்லும் பட்சத்தில் குறித்த கடிதத்தின் மூலப்பிரதியை எமக்குச் சமர்ப்பிக்கவேண்டும். முடிவு திகதிக்கு பின்னர் கிடைக்கும் ஆக்கங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

மதிப்பீட்டின்போது விவரணத்தைத் தொகுத்த முறை, விஞ்ஞான விளக்கத்தின் பொருத்தப்பாடு, அளிக்கை செய்த விதம், காட்சிப்படுத்தலில் செய்துள்ள புதுமைகள், காட்சித் தெளிவு போன்ற விடயங்கள் முக்கியமாகக் கருத்திற் கொள்ளப்படும்.

## 4. பாடசாலைத் தோட்டப் போட்டி (School Gardening Competition)

இப்போட்டி பாடசாலை மட்டத்திற்குரியது. இப்போட்டியில் ஏற்கனவே தோட்டம் வைத்துப் பராமரிக்கும் பாடசாலைகள் மட்டுமே பங்குபற்றமுடியும். இதற்கான மதிப்பீட்டின்போது, தோட்டத்தின் அமைப்பு, தோட்டத்தில் மாணவர்கள்/ஆசிரியர்கள் போன்றோரின் பங்களிப்பு, அறுவடையை

அதிகரிக்கப் பயன்படுத்தும் வழிமுறைகள், பயன்படுத்தப்படும் புதிய உத்திகள், அறுவடையின் பயன்பாடு போன்ற விடயங்கள் கவனத்திற்கொள்ளப்படும். இப்போட்டியில் பங்குபற்றுவதற்காக ஒரு பாடசாலை விண்ணப்பிக்கும் பட்சத்தில் மதிப்பீட்டுக் குழுவினர் நேரடியாகப் பங்குபற்றிய பாடசாலைகளிற்கு வருகை தந்து பாடசாலை சமூகத்துடன் கலந்துரையாடி மதிப்பீடுகளைச் செய்வர். மதிப்பீட்டுக்கான திகதிகள் விண்ணப்பிக்கும் பாடசாலைகளுக்கு பின்னர் அறியத்தரப்படும்.

## 5. வினாவிடைப் போட்டி (Quiz Competition)

ஒரு பாடசாலையிலிருந்து பிரிவு III ஐச் சேர்ந்த ஐந்து (05) மாணவர்கள் கொண்ட ஒரு குழு மாத்திரமே பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள். ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலம் போட்டி நடைபெறும். இப் போட்டியானது மூன்று சுற்றுக்களாக நடாத்தப்படும்.

முதலாம் சுற்றில் விஞ்ஞான வினாவிடை எழுத்துப்பரீட்சையானது மாகாண மட்டத்தில் நடைபெறும். இப்போட்டி அவ்வலயத்தில் அமைந்துள்ள குறித்தவொரு பாடசாலையில் இடம்பெறும். அங்கு அவ்வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பங்குபற்றும் மாணவர்கள் போட்டி நடைபெறும் பாடசாலைக்கு சமூகமளித்து எழுத்துப்பரீட்சையில் பங்கேற்பார்கள். இச்சுற்றானது நேரடியாக நடாத்த முடியாதவிடத்து இணைய வழி ஊடாக நடைபெறும். அதிலிருந்து அதிகூடிய புள்ளிகள் பெற்ற 6 பாடசாலைகள் இரண்டாம் சுற்றுக்கு தெரிவுசெய்யப்படுவர். இரண்டாம் சுற்றானது வாய்வழி மூலமான விஞ்ஞான வினாவிடைப் போட்டியாக நடாத்தப்படும். இரண்டாம் சுற்றின் இறுதியில் அதிகூடிய புள்ளியைப்பெற்ற 3 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு மூன்றாம் சுற்று இடம்பெறும். மூன்றாம் சுற்றின் இறுதியில் 3 பாடசாலைகள் புள்ளிகளின் அடிப்படையில் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடத்துக்கு தெரிவுசெய்யப்படும். இரண்டாம் மூன்றாம் சுற்றுகள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

முதல் மூன்று இடங்களை பெறும் பாடசாலைகளுக்கு வெற்றிக்கிண்ணமும் அதற்கு மேலதிகமாக எழுத்து மூலமான விஞ்ஞான வினாவிடைப் போட்டியில் அதாவது முதலாவது சுற்றில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் முதல் 10 மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

## 6. புனைகதைப் போட்டி (Fiction Story Competition)

ஒரு பாடசாலையிலிருந்து பிரிவு III ஐச் சேர்ந்த ஆகக்கூடியது 02 மாணவர்கள் மட்டும் ஆங்கிலம் அல்லது தமிழ் மொழி மூல புனைகதைப் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர். இரண்டு மொழிமூலமான ஆக்கங்களும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படும்.

இப்போட்டியானது மாகாண மட்டத்தில் நடைபெறும். இப்போட்டி அவ்வலயத்தில் அமைந்துள்ள குறித்தவொரு பாடசாலையில் இடம்பெறும். அங்கு அவ்வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் போட்டி நடைபெறும் பாடசாலைக்கு சமூகமளித்து குறிக்கப்பட்ட ஒரு மணி நேரத்தினுள் தரப்பட்ட கருப்பொருளில் புனைகதையை எழுதவேண்டும்.

புனைகதையின் கருப்பொருள் போட்டி நடைபெறும் தினத்தில் தரப்படும். போட்டியாளரால் எழுதப்படும் கதைக்கு பொருத்தமான தலைப்பு மேலே எழுதப்பட வேண்டும். போட்டியாளர் நேரடியாக சமூகம் தந்து 300 தொடக்கம் 500 வரையான சொற்களிற்குள் ஒரு மணி நேரத்தில் எழுத வேண்டும்.

மதிப்பீட்டின்போது பின்வருவன கருத்தில் கொள்ளப்படும்: கருப்பொருளுக்கு பொருத்தமான கதை, கதைக்கு பொருத்தமான தலைப்பு, படைப்பாற்றல், பொருத்தமான நிலையான சொற்களஞ்சியப் பயன்பாடு, பொருத்தமான குறியீடுகள். முன்னரே வெளியான கதைகளை பிரதி செய்தால் போட்டியிலிருந்து நீக்கப்படுவீர்கள்.

## 7. பேச்சுப் போட்டி (Oration Competition)

ஒரு பாடசாலையிலிருந்து பிரிவு II, III ஐச் சேர்ந்த ஆகக்கூடியது இரண்டு (02) மாணவர்கள் மட்டும் இப்பேச்சுப்போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர். இப்போட்டி இரண்டு சுற்றுக்களாக நடைபெறும். முதலாம் சுற்றானது நிகழ்நிலையிலும் (இணையவழி) இரண்டாம் சுற்றானது யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திலும் நடைபெறும்.

இந்தப்போட்டியின் பிரதான கருப்பொருள் “பொருளாதார நெருக்கடி காலத்தில் தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவம்” என்பதாகும். முதலாம் சுற்றிற்கு இக்கருப்பொருளின் கீழ் ஐந்து தலைப்புகள் தரப்பட்டுள்ளன. மாணவர்கள் ஐந்து தலைப்புகளிலும் தமது உரையைத் தயார் செய்து நடுவர்கள் எழுமாறாகக் கேட்கும் தலைப்பில் பேசுதல் வேண்டும்.

1. வயிற்றுக்கு சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்
2. தேட்டத்திலே அடங்காத நிதியின் சிறப்பினிலே உயர் நாடு
3. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு
4. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல நாட வளந்தரு நாடு
5. நாட்டிற்கு எப்போது வரும் நல்ல நாழிகை!

போட்டிக்கான நேரம்: 8 – 10 நிமிடங்கள்

முதலாம் சுற்றில் தெரிவு செய்யப்படும் 10 மாணவர்கள் இரண்டாம் சுற்றிற்கு அனுமதிக்கப்படுவார்கள். இரண்டாம் சுற்றிற்கான தலைப்பு போட்டி நடைபெறும் தினத்தில் வழங்கப்படும். மாணவர்கள் தமது உரையை தயார் செய்து 8-10 நிமிடங்கள் பேச வேண்டும்.

## 8. கைப்பேசி புகைப்படப் போட்டி (Mobile Photography Competition)

ஒரு பாடசாலையிலிருந்து மூன்று பிரிவிலிருந்தும் மாணவர்கள் கைப்பேசி புகைப்படப்போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு பிரிவிலும், ஆகக்கூடியது இரண்டு (02) மாணவர்கள் மட்டுமே இப்போட்டியில் பங்குபற்ற முடியும்.

இந்தப்போட்டியின் பிரதான கருப்பொருள் “பொருளாதார நெருக்கடிக் காலத்தில் தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவம்” என்பதாகும். தற்போதைய நாட்டின் நிலைமையை தத்ரூபமாக கைப்பேசி கமராவில் பதிவு செய்ய வேண்டும்.

புகைப்படம் கைப்பேசி கமராவால் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் பின்னர் நாட்டில் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட நிலைமையை புகைப்படமாக பதிவுசெய்திருத்தல் வேண்டும். தொழில்முறைக் கமராவில் எடுத்த புகைப்படம் போட்டிக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. ஏற்கனவே பிரதான அல்லது சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட புகைப்படங்களை போட்டிக்கு அனுப்பமுடியாது.

**போட்டியின் தலைப்பு: ‘வீடு, சந்தி தெருவெங்கும்………’**

புகைப்படத்தை எடுத்தவர் பெயர், தொடர்பிலக்கம், மின்னஞ்சல் முகவரி போன்றவற்றோடு கமரா விபரம், இடம், நேரம் என்பன அடங்கலான விபரங்கள் மற்றும் புகைப்படம் பற்றிய சிறுகுறிப்பு என்பன தமிழில் யுனிக்கோட் எழுத்துருவில் தட்டச்சு செய்து தனியாக இணைக்கப்பட வேண்டும். புகைப்படத்திற்கு தலைப்பு தரப்பட வேண்டும். புகைப்படமும் விபரங்களும் பாடசாலை மின்னஞ்சல் முகவரி ஊடாக அனுப்பப்பட வேண்டும். இதற்குரிய இணைப்பு விண்ணப்பித்த பின்னர் அனுப்பிவைக்கப்படும். தெரிவு செய்யப்படும் புகைப்படம் இறுதிச்சுற்றுக்காக A4 அளவு புகைப்படமாக பிரதி எடுக்கப்பட்டு விபரங்கள் உள்ளடங்கலாக காட்சிப்படுத்தலுக்குரியதாக யாழ்ப்பாண விஞ்ஞான

சங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ஆண்டு நிறைவு நிகழ்வில் காட்சிப்படுத்தப்படும்.

புகைப்படத்தின் அடிப்படை விடயங்களான சட்டகம், ஒளி, காட்சிக்குவிவு, வெளிப்படுத்தப்படும் கருத்து போன்ற விடயங்கள் போட்டியில் கவனத்தில் கொள்ளப்படும்.

குறிப்பு:

1. அனைத்து இணைய விண்ணப்பங்களும் (google form) பூரணமாக நிரப்பப்பட்டு 23.10.2022 ம் திகதிக்கு முன்பாக அனுப்ப வேண்டும்.
2. முடிவுத்திகதிக்கு பின்னர் எந்த ஒரு விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது
3. விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்யாத போட்டியாளர்கள் எவரும் போட்டிகளில் பங்குபற்றமுடியாது.
4. போட்டிகள் அனைத்தும் கார்த்திகை (November) மாதத்தில் நடைபெறும்.
5. சான்றிதழ்களும் பரிசில்களும் விஞ்ஞான சங்கத்தால் நடாத்தப்படும் வருடாந்த அமர்வின்போது (மாசி 2023) வழங்கப்படும்.

வெற்றிபெற வாழ்த்துக்கள்.

**தொடர்புகளுக்கு:**

Dr. (Mrs.) Sivanayani Selvakumar
Assistant General Secretary/ Jaffna Science Association (JSA)
Mobile No: (0727708040)
Email: sivanayani@gmail.com